பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 28 | சனிக்கிழமை | 13.01.2024 | அதிர்வு 165

## தென்கிழக்கு பல்கலை கல்வி நடவடிக்கைகள் மேலும் ஒத்திவைப்பு

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் மேலும் நீடிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டுள் என (விரிவான செய்தி 13ஆம் பக்கத்தில்...)

# தமிழரசின் தலைவரானால் தமிழர்களின் உரிமைக்காகத் தொடர்ந்தும் பாடுபடுவேன்

## திருமலையில் சுமந்திரன் எம்.பி. உறுதியுரை

(எஸ்.கீதபொன்கலன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டால் கட்சியைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பேன். அதே வேளை, கட்சி மூலமாகத் தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பேன்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கட்சித் தலைவரைத் தெரிவு செய்வதற்கு வாக்களிப்பது சிறந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். 06





# வாக்குறுதிகளை நிறைவேற்றினால் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவோம்

## இப்படிச் சம்பந்தன் கூறுகின்றார்

**"வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினால் ஜனாதிபதிக்கும், அரசுக்கும் ஆதரவு வழங்கத் தயார்."**

**– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார் என்று 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது.** 06

# கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் மோதல்!



## 25 கைதிகள் காயம் 60 பேர் தப்பியோட்டம்

பொலனறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தை – கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுக்களுக்கிடையில் நேற்று இடம்பெற்ற மோதல் காரணமாக 25 பேர் காயமடைந்துள்ளனர். 06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தேர்வு, கட்சியின் தேசிய மாநாடு ஆகியவை பற்றிய செய்திகள்தான் ஊடகங்களில் இப்போது அதிக 'ட்ரெண்டிங்'கில் உள்ளன. அதைத் தவிர்த்து எழுத முடியாது என்பதால் அதை ஒட்டிய கொசுறுத் தகவலை இன்று தரலாம் என்று நினைக்கிறேன்.

வரும் 21 ஆம் திகதி – இன்னும் எட்டு நாள்களில் – கட்சியின் புதிய 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# ஜனாதிபதியின் வெளிநாட்டு பயணங்களுக்கு இருபது கோடி ரூபா மேலதிகமாக ஒதுக்கீடு!

## சபையில் கேள்வி எழுப்பினார் அநுரகுமார எம்.பி.



**“ஜனாதிபதியின் வெளிநாட்டு சுற்றுப் பயணங்களுக்கு இருபது கோடி ரூபாவை மேலதிகமாக ஒதுக்குவதன் காரணம் என்ன? நிதி ஒழுக்கத்தை பற்றி பேசும் ஜனாதிபதி முதலில் நிதி ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்.”**

**- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நாடாளுமன்றத்துக்கு குறைநிரப்பு பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி, நிதி ஒழுக்கம் பற்றி அரசாங்கம் பாடம் கற்பிக்கிறது.

இவர்களின் நிதி ஒழுக்கத்தை சற்று ஆராய்ந்து பார்ப்போம். டெலிகொம் நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரச முயற்சியாண்மை திணைக்களத்துக்கு 13 ஆயிரம் லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த 13 ஆயிரம் லட்சம் ரூபா எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்பதை நாடாளுமன்றத்துக்கு அறிவியுங்கள். இதில் நிதி ஒழுக்கம் உள்ளதா?

இந்தக் குறை நிரப்புப் பிரேரணையில் ஜனாதிபதியின் மேலதிக செலவுகளுக்காக இருபது கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்கள், எரிபொருள் மற்றும் வாகன பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட மானியத்தின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு இருபது கோடி ரூபா மேலதிகமாக ஒதுக்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

வரவு – செலவு திட்டத்தின் போது ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்கள், எரிபொருள் மற்றும் வாகனங்களுக்காக நிதி ஒதுக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கான செலவினங்கள் நாட்டுக்கு பாரிய சுமை என்பதை பலமுறை குறிப்பிட்டுள்ளோம். இதற்கு மேலதிகமாக 20 கோடி ரூபாவை ஒதுக்கக் குறை நிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முதலில் ஜனாதிபதி நிதி ஒதுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற காலத்தில் இருந்து முழு நாட்டையும் வலம் வருகிறார். இலங்கையில் எந்த அரச தலைவர்களும் இவ்வாறு உலகைச் சுற்றவில்லை. ஒன்று மரண வீட்டுக்கு செல்கிறார். திருமண வீட்டுக்கு செல்கிறார். அல்லது உலக நாடுகளின் அரச தலைவர்கள் பங்குபற்றாத மாநாடுகளில் உரையாற்றுகிறார். முழு உலகையும் சுற்றி விட்டு மீண்டும் உலகம் சுற்ற இருபது கோடி ரூபா கேட்கிறார்.

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கும், சீருடை வழங்குவதற்கும் மானியம் ஒதுக்கப்படவில்லை.

பரீட்சை வினாத்தாள் திருத்தும் ஆசிரியர்களின் கொடுப்பனவு அதிகரிக்கப்படவில்லை. ஆனால் ஜனாதிபதி உல்லாச பயணம் செல்ல இருபது கோடி ரூபா ஒதுக்கப்படுகிறது.

ஆகவே இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்றமும் சிந்திக்க வேண்டும், ஜனாதிபதியும் சிந்திக்க வேண்டும்.

பாடசாலை உபகரணத்தில் இருந்து அத்தியாவசிய உணவு பொருள்கள் வரை வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. வரி வருமானத்தை பெற்றுக் கொண்டு ஜனாதிபதி உலகை சவாரி வருகிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி செயலகத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்கு வரும் போது மஹிந்த ராஜபக்ஷ விஜேராம மாவத்தையில் இருந்து நாடாளுமன்றத்துக்கு வரும் போது இவர்களின் வாகனப் பேரணியுடன் அம்புலன்ஸ் வருகிறது.

இவர்கள் படுக்கை நோயாளிகளா? ஆனால் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் இல்லை. இவ்வாறான செயற்பாடுகளின் போது மக்கள் எவ்வாறு திருப்தியுடன் வரி செலுத்துவார்கள்.

அரசியல்வாதிகள் சுகபோகமாக வாழ்வதற்காகவே வரி அறவிடப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ எப்படி அரச உத்தியோகபூர்வ இல்லத்தில் வாழ முடியும்?

நாமல் ராஜபக்ஷ அரச இல்லத்தில் வாழ்கிறார். அவரது தந்தை, சித்தப்பா உட்பட குடும்பமும் அரச இல்லத்தில் வாழ்கிறார்கள். வெட்கமில்லையா? நாமலுக்கு எவ்வாறு அரச இல்லம் வழங்க முடியும்? முடிந்தால் நாடாளுமன்றத்தில் குறிப்பிடுங்கள்.

2024 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியின் செலவுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு நேர்ந்தது என்ன? ஏன் மேலதிகமாக இருபது ரூபா குறை நிரப்பு பிரேரணை ஊடாகக் கோரப்படுகிறது என்பதை நாடாளுமன்றத்துக்கு தெளிவுபடுத்த வேண்டும். இந்தக் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பார்கள் என்பதை பார்த்துக் கொண்டிருக்கிறேன். – என்றார்.



# கடலில் மீனவரின் வலையில் சிக்கிய பெரிய குளத்து மீன்!



(ஏ.எச்.ஹஸ்பர்)

கிண்ணியா பகுதியில் உள்ள மீனவர் ஒருவர் கடலில் வலை வீசிய போது பெரிய குளத்து மீன் ஒன்று வலையில் சிக்கியுள்ளது.

நேற்று மாலை கடலுக்கு சென்ற போது அந்த மீனவரின் வலையில் குளத்து மீனான கனையான் மீன் ஒன்று சிக்கியுள்ளது.

மழை வெள்ளம் காரணமாக பல குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையால் கடல் நீருடன் குளத்து நீர் கலப்பு காரணமாகவும் வெள்ள நீரோட்டம் அதிகரிப்பு காரணமாக குளத்து மீன் கடலில் சிக்கியுள்ளதாக மீனவர் தெரிவித்தார். குறித்த மீன் சுமார் 15 கிலோ எடை கொண்டதாகும்.



# நள்ளிரவில் திடீரென காரைதீவுக்குள் வெள்ளம் புகுந்ததனால் மக்கள் அல்லோல கல்லோலம்!

(வி.ரி.சகாதேவராஜா)

இங்கினியாகல சேனநாயக்கா சமுத்திரத்தின் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டதால் நேற்று முன்தினம் நள்ளிரவில் திடீரென வெள்ளநீர் காரைதீவுக்குள் புகுந்தது .

மக்கள் பதறி, அலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள் நிலைமை அல்லோல கல்லோலமானது. மக்கள் பீதியுடன் இடம் பெயர்ந்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் – நேற்று வெள்ளிக்கிழமை விடிகாலையில் இந்த வெள்ள நீர் பிரதான வீதியை தாண்டி ஊருக்குள் பாய்ந்தது.

சுமார் 300 மீட்டர் தூரம் குளத்து நீர் நள்ளிரவில் வந்ததனால் மக்கள் பீதி அடைந்தார்கள்.

இங்கினியாகல குளம் உடைந்துவிட்டதோ என்ற நினைப்பிலே மக்கள் பீதியுடன் அலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள்.

அந்த கணத்தில் இருந்து மறுநாள் நேற்று வெள்ளிக்கிழமை இரவு வர்சி மக்கள் விழித்துக் கொண்டே இருக்கின்றார்கள்.


வெள்ளிக்கிழமை பகல் வெயில் அடித்துக் கொண்டிருக்கின்றது. மழை இல்லை.

மக்களின் வீடு வாசல் எல்லாம் வெள்ள நீர் தேங்கி காணப்படுகிறது.











# தேயிலை சிறு தோட்ட முறைமையை ஏற்படுத்துதல்: தனிநபர் பிரேரணை நாடாளுமன்றுக்கு முன்வைப்பு



பெருந்தோட்ட தேயிலைக் கைத்தொழில் முறைமைக்குப் பதிலாக தேயிலை சிறு தோட்ட முறைமையொன்றை ஏற்படுத்துதல் என்ற தலைப்பில் நாடாளுமன்றில் நேற்று தனிநபர் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் இந்தப் பிரேரணையை முன்வைத்திருந்தார். தற்போதுள்ள பொருந்தோட்ட முறைமை தோல்வி அடைந்துள்ளதாகவும் வேலுகுமார் எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை, மேற்படி பிரேரணையை வழிமொழிந்து கருத்துரைத்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, பெருந்தோட்ட மக்களின் ஊடாகவே நாட்டுக்கு அதிகளவான அந்நிய செலாவணி கிடைப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதன்படி. மக்கள் உரிய முறையில் பாதுகாக்கப்பட வேண்டுமென வும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அந்த மக்கள் தொடர்ந்தும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒவ்வொரு முறையும் வேதனம் அதிகரிக்கப்படுமென இடம்பெறுகின்ற அரசியல் நாடகங்களில் சிக்கிக் கொள்ளும் அந்த மக்கள் நாட்டுக்காக பாரிய சேவையாற்றி வருகின்றனர்.

இதற்கமைய, அவர்களை நாளாந்தம் வேதனம் பெறும் தரப்பினர் என்ற நிலையில் இருந்து மாற்றி சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும்.” என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காணி உரிமை விடயத்தில் 200 வருடங்களாக பெருந்தோட்ட மக்கள் ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர் என இதன்போது கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.

# சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்குப் பாராட்டு




சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் முதல் மதிப்பாய்வை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்காக சர்வதேச நாணய நிதியம், இலங்கைக்குத் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

சாதகமான ஆரம்பத்துடன் மக்கள் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய சவாலான மறுசீரமைப்புகளுக்கான இலங்கையின் அர்ப்பணிப்பையும் சர்வதேச நாணய நிதியம் வரவேற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், ஆசியாவின் முன்னோடியாக மாறி, ஆட்சியைஜ் கண்டறியும் அறிக்கையை வெளியிட்டமைக்காக சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில், அதன் பணிப்பாளர்கள் இலங்கைக்கு தமது பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.


நினைவேந்தல் நிகழ்வு
CLICK HERE
VIDEO
ஈழத்தமிழர்
மனங்களில்
நீங்கா இடம் பிடித்த
கப்டன் விஜயகாந்
காலம் : 10.02.2024 (சனிக்கிழமை)
இடம் : Gemeinschaftszentrum Affoltern
Bodenacker 25, 8046 Zürich
நேரம் : 15.00
அனைவரையும் அன்புரிமையோடு
அழைக்கிறோம்
தொடர்புகளுக்கு
0764183254, 0789006668, 0794504050, 0797459415, 0789009006, 0765798182


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230


யாழ்ப்பாணத்தில் இயங்கும்
Digital Mediaவில்
வேலை வாய்ப்புகள்
நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள்
Content creators
வானொலி அறிவிப்பாளர்கள்
Video Editors
ஊடகத்துறையில் ஆர்வம்
உள்ளவர்களுக்கு, சம்பளத்துடன் கூடிய
பயிற்சி வாய்ப்புகளும் உள்ளன.
APPLY NOW
0777824004
aonemedia.lk@gmail.com

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவரைத் தேர்வு செய்யும் தேர்தல் திருகோணமலையில் நடக்கவிருக்கின்றது. கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் வாக்களிக்கவிருக்கின்றனர்.

அதற்கு இடையில் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தை கூட்ட முயற்சிக்கின்றார் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜா என்று குறிப்பிட்டிருந்தேன்.

தலைவர் தெரிவிற்கான தேர்தலுக்கு முன்னர் மத்திய குழு கூடுகின்றது. ஆனால் மாவை சேனாதிராஜா முன்னர்வலியுறுத்தியமையைப்போன்று–கேட்டுக்கொண்டமையைப் போன்று – அடுத்த வரும் நாள்களில் அல்ல. மாறாக, தலைவர் தேர்தலுக்கு முதல் நாள்தான் – ஜனவரி 20ஆம் திகதிதான் – அது திருகோணமலையில் கூடுகின்றது.

முதல் நாள் கூடி, அடுத்த நாள் நடக்கும் தலைவர் தேர்வுக்கான தேர்தலை மத்திய குழு தடுக்கும் அல்லது மாற்று ஒழுங்குகளைச் செய்யும் என்று நம்புவதற்கு – அல்லது எதிர்பார்ப்பதற்கு – இடமில்லை.

ஆக, அடுத்த நாள் நடைபெறவிருக்கும் தலைவர் தேர்தலுக்கான தெரிவை நடத்துவதற்குப் பொறுப்புடைய தேர்தல் குழு ஒன்றை நியமிக்கும் முக்கிய பணியை முதல் நாள் நடைபெறும் மத்திய குழு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தலைவர் தேர்வு அடுத்த ஞாயிற்றுக்கிழமை 21 ஆம் திகதி நடைபெற்றாலும், கட்சியின் பொதுச் செயலாளர் உட்பட ஏனைய பதவிகளுக்கு ஆள்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை பெரும்பாலும் அதற்கு அடுத்த வாரம் 27ஆம் திகதி சனிக்கிழமைதான் நடைபெறும் என்று தெரிய வருகிறது.

நடைபெறும் தேர்தலில் வெற்றியீட்டும் புதிய தலைவர் தமது தலைமையில் செயற்படப் போகும் கட்சியின் புதிய நிர்வாகிகளை தேர்வு செய்வதற்கு இடையில் ஆறு நாள்கள் கால அவகாசம் இருக்கும் என்பது நல்ல விடயமே.

புதிய தலைவர் யார் என்பது 21 ஆம் திகதி முடிவானாலும், அவர் 28ஆம் திகதி தேசிய மாநாட்டின் போது தலைமைப் பேருரையை ஆற்றி, பதவிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வார். அது வரை – அதாவது அடுத்த 15 நாள்களுக்கு – இப்போதைய தலைவர் மாவை சேனாதிராஜாவே கட்சியை வழிநடத்துவார்.

தேசியமாநாடு நடந்து முடிவதற்கு அது இன்னும் எத்தனை விக்கினங்களைக் கடக்க வேண்டி இருக்கின்றதோ தெரியவில்லை. மாவை எம்பிரான் அருள் கடாட்சம்தான் அதற்கு முக்கியம். நான் மாவைக் கந்தனைச் சொன்னேன் நண்பர்களே...!

## தமிழரசின் தலைவரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளை காரியாலயத்தில் நேற்று கட்சி உறுப்பினர்களைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கட்சியில் இணக்கப்பாடு தொடர்பில் பரிசீலனை செய்தபோது சாத்தியப்படாது என்ற தீர்மானத்துக்கு அமைய ஜனநாயக ரீதியாக வாக்களிப்பதே சிறந்தது எனக் கலந்துரையாடப்பட்டுள்ளது. நான் கட்சியின் தலைவராக வருவேன் என யாராலும் கூற முடியாது.

எனினும், கட்சியின் தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டால் கட்சியைகி கட்டுக்கோப்பாக வைத்திருப்பேன். கட்சி மூலமாக தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் பணிகளை முன்னெடுப்பேன்.” – என்றார்.

இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்யும் நோக்கில் கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் கொழும்பில் இரா.சம்பந்தன் தலைமையில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது இணக்கப்பாட்டுடன் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு 24 மணி நேரம் அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இதன்படி, தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் கொழும்பில் சந்தித்துப் பேசியிருந்தனர்.

எனினும், இந்தப் பேச்சில இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கவில்லை. இதையடுத்து வாக்களிப்பு மூலம் தலைவரைத் தெரிவு செய்ய முடிவெடுக்கப்பட்டது.

## வாக்குறுதிகளை நிறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

அந்தச் செய்தியில் சம்பந்தன் கூறியதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“கடந்த காலங்களில் நாட்டின் ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதற்காக தைப்பொங்கலையும், சிங்கள – தமிழ் புத்தாண்டையும் தெரிவு செய்திருந்தனர். எனினும், தமிழ் மக்களுக்கு எந்தவொரு தீர்வையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

இந்நிலையில், ஒவ்வொரு தைப் பொங்கலையும், தமிழ் – சிங்கள புத்தாண்டையும் தமிழ் மக்கள் மிகவும் எதிர்ப்பார்புடனேயே கடந்து சென்றுள்ளனர்.

இந்தத் தடவை தைப்பொங்கல் காலத்தில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார். அதற்கு ஏற்ற முறையில் ஜனாதிபதி செயற்படுபவர் என நம்புகின்றோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற ஆசை அன்றிலிருந்து இருந்தது.

எனினும், அவரைச் சுற்றியிருந்தவர்கள் அதற்கு இடம் கொடுக்காமல் இழுத்தடித்தனர். அதனால் தமிழ் மக்களின் நம்பிக்கை ஏமாற்றத்தில் முடிவடைந்தது.

தென்னிலங்கையின் இனவாத அரசியலுக்கு மத்தியில் தமிழ் மக்களுக்கு சற்று நிவாரணம் வழங்குவது மிகவும் கடினமான விடயம் என்பதை அனைவரும் புரிந்துகொண்டுள்ளனர்.

ஆனால், தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். இது தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டும்.” – என்றுள்ளது.

## கந்தக்காடு புனர்வாழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவத்தின்போது சுமார் 60 இற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பிச் சென்ற நிலையில் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தப்பியோடிய கைதிகளைக் கைது செய்வதற்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து விசேட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர் என்று பொலனறுவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஷான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைக்கு சோமாவதி பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு இடையூறாக இருக்கின்றது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.





# வெள்ள அனர்த்தத்தை வேடிக்கை பார்க்க மாவடிப்பள்ளியில் திரளும் மக்கள் கூட்டம்

(நூருல் ஹுதா உமர்)

எச்சரிக்கையையும் மதியாது போக்குவரத்துத் தடைப் படுமளவுக்கு மாவடிப்பள்ளிக்கு வெள்ளம் பார்க்கப் படை யெடுக்கின்றது மக்கள் கூட்டம்.

அடைமழை காரணமாக அம்பாறை மாவட்டத்தின் பல் வேறு பிரதேசங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அணைக் கட்டுகள் எல்லாம் திறக்கப்பட்டமையால் மக்கள் கடுமையான அசௌகரியங்களை சந்தித்து வரும் இவ்வேளையில் அம்பாறை மாவட்டத்தின் அதிக பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அதனையொட்டியதாக அம்பாறை – காரை தீவு – மாவடிப்பள்ளி வீதி வெள்ளத்தில் மூழ்கி போக்குவரத்து அபாயகரமானதாக மாறியுள்ளது. இந்த பாதைகளினூடாக மோட்டார் சைக்கிள், ஓட்டோ, கார் என்பன செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அரசாங்கமும், அரச திணைக்களங்களும் அறிவித்துள்ள நிலையில் அவற்றை யெல்லாம் பொருட்படுத்தாது சாய்ந்தமருது, கல்முனை, மாளிகைக்காடு, காரைதீவு, மருதமுனை, நிந்தவூர் போன்ற பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த மக்கள் சாரை சாரையாக குடும்பம் சகிதம் வெள்ள அனர்த்த நிலையைப் பார்வை யிட மாவடிப்பள்ளியை நோக்கி வந்த வண்ணம் உள்ளனர். இதனால் கல்முனை– அக்கரைப்பற்று மற்றும் கல்முனை– அம்பாறை வீதிகள் வாகன நெரிசலால் கடுமையான போக்குவரத்துச் சிரமங்கள எதிர்கொள்வதுடன் அம்புலன்ஸ் போன்ற அவசர வாகனங்கள் செல்வதிலும் சிக்கல் நிலை உருவாகி உள்ளதை அவதானிக்க முடிகிறது.

சிறுவர்கள், வயோதிபர்கள் கூட வெள்ளத்தில் இறங்கி விளையாடும் நிலை தோன்றியுள்ளதால் வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்படும் உயிர் அச்சுறுத்தல் கூட இங்கு நிலவுகிறது.

மக்களின் அதிக படையெடுப்பு காரணமாக தற்காலிக வர்த்தக நிலையங்களும் இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை யுடன், காரைதீவு பிரதேச சபை மக்களுக்கான இலவச போக்குவரத்து ஏற்பாடுகளை செய்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.











நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இன்னமுமா நம்புகின்றார் சம்பந்தன்?

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை இந்தத் தைப்பொங்கலுக்கு முன்னர் நிறைவேற்றினால் ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் ஆதரவு வழங்கத் தயார் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

‘தி ஐலண்ட்’ ஆங்கில நாளிதழின் சகோதர சிங்களப் பத்திரிகையான ‘திவயின’ இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கின்றது.

கடந்த 10 ஆம் திகதி புதன்கிழமை சம்பந்தன் எம்.பி. நாடாளுமன்றுக்குச் சென்றிருந்தார். அச்சமயத்தில் இந்தச் செவ்வியை அவர் மேற்படி பத்திரிகைக்கு வழங்கியிருக்கக் கூடும். அது உண்மையில் அவர் வழங்கிய கருத்துகளின் பிரதிபலிப்புத்தானா என்பதும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆயினும் இந்தப் பேட்டி ஊடாக சம்பந்தன் சில விடயங்களை குறிப்பிட முனைகின்றார் என்றே தோன்றுகின்றது.

‘பொங்கலுக்குள் தீர்வு வரும்’, ‘புத்தாண்டுக்குள்தீர்வுகிட்டும்’என்றுதமிழ்மக்களுக்கு அவ்வப்போது நம்பிக்கை கொடுத்த ஒரே தலைவர் அவர்தான். அவர் மட்டும்தான்.

நல்லாட்சி அரசுடன் முழுமையாகச் சேர்ந்து, ஒன்றுபட்டு, அவரும் அவரது கூட்டமைப்பும் இயங்கிக் கொண்டிருந்த போதுதீர்வுக்கானமுயற்சிகளும்முன்னெடுக்கப்பட்டன. அவற்றின் மீது முழு நம்பிக்கை வைத்தே, அப்போதைய நல்லாட்சி அரசுடன் நடந்த சமரச முயற்சிகளை ஒட்டிய கயிற்றை தாம் விழுங்கிக் கொண்டே, தமிழ் மக்களுக்கு அப்படி நம்பிக்கையூட்டும் கயிறுகளை அவர் கொடுத்துக் கொண்டிருந்தார். ஆனால் அப்படி நம்பிக்கை ஊட்டும் செய்திகளை ஆட்சியாளர்களே மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தனர் என்று சம்பந்தன் இப்போது இந்தப் பேட்டியில் கூறுகின்றார்.

“கடந்த காலத்தில் இருந்து இந்த நாட்டின் ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்காக தைப்பொகலையும் சிங்கள - இந்து புத்தாண்டையும் தெரிவு செய்த போதிலும் அந்த வருடங்களில் தமிழ் மக்களுக்கு எதனையும் பெற்றுக்கொடுக்கவில்லை.” - என்று சம்பந்தன் இப்பேட்டியில் கூறியிருக்கின்றார்.

ஆனால், ஆட்சியாளர்கள் யாரும் மக்களுக்கு - குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு - அப்படி நம்பிக்கை அறிவிப்பை பொங்கலை, வருடப்பிறப்பை, தீபாவளியைக் குறிப்பிட்டுத் தரவில்லை. சில சமயங்களில் சம்பந்தனுக்கு அப்படி நம்பிக்கை ஊட்டும் செய்திகளையோ தகவல்களையோ ஆட்சியாளர்கள் கயிறாகக் கொடுத்து கொண்டு இருந்தார்களோ தெரியவில்லை.

அதே சமயத்தில் சம்பந்தனின் இந்தப் பேட்டி - செவ்வி - இன்னும் ஒரு கருத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

நல்லாட்சி அரசின் காலத்தைய இவ்வளவு ஏமாற்றங்களின் பின்னரும் -

இப்போதையரணில்ஆட்சிப்பீடத்தின் ஒன்றரை வருட கால ஏமாற்று ஆரவாரங்களின் பின்னரும் -

இன்னமும் கூட, ரணில் விக்கிரம சிங்கவை அவர் நம்புவதற்குத் தயாராக இருக்கின்றார், நம்பி இருக்கின்றார் என்பதுதான் அந்த பேட்டி ஊடாக வெளிப்படுத்தப்படும் செய்தி.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த நாட்டின் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற அதீத ஆசை அன்றிலிருந்து இருந்ததாகவும், அவரைச் சுற்றியிருந்த ஏனையவர்கள் அதற்கு இடம் கொடுக்காமல் இழுத்தடித்தனர் எனவும், அதனால் தமிழ் மக்களின் நம்பிக்கைகள் கலைந்தன எனவும் சம்பந்தன் ஏமாற்றம் தெரிவிக்கின்றார்.

ஆக, ‘ரணில் விக்கிரமசிங்க நல்லவர். வடக்கு - கிழக்குப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அதீத ஆசை அன்றிலிருந்து இன்று வரை அவருக்கு இருக்கின்றது. ஆயினும் சுற்றி இருந்தவர்கள்தான் அதற்கு இடம் கொடுக்காமல் இழுத்தடிக்கின்றார்கள்’ - என்று இன்னமும் நம்புகின்றார் சம்பந்தன்.

இவ்வளவு பட்டறிவுக்குப் பின்னரும் - ரணில் விக்கிரமசிங்கவிடம் பாடம் படித்த பின்னரும் - இந்த வயோதிபத் தலைவர் இன்னமும் சுயபுத்தியைப் பெறவில்லை என்பதைத்தான் அவரது பேட்டி வெளிப்படுத்தி நிற்கின்றது.

எதிரி ஏமாற்றுகின்றான் என்பதைப் புரிந்து கொள்ளாத ஏமாளி இருக்கும் வரை ஏமாற்றுதல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

இன்னும் கூட்டமைப்பின் தலைவர் என்று கருதப்படும் சம்பந்தன், ரணில் விக்கிரமசிங்கவை இன்னமும் நம்புகின்றவராக இருப்பாரானால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழர்களுக்கு சாதகமான மாற்றம் வரப்போவதில்லை என்பது உறுதி.

# செந்தில் பாலாஜிக்கு பிணை இல்லை: முதன்மை அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு

சட்டவிரோத பணப் பரிமாற்ற தடை சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜி 3 ஆவது முறையாக பிணை கோரி தாக்கல் செய்த மனுவை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

அரசு போக்குவரத்து கழகத்தில் வேலை வாங்கித் தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்டார் என பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் அடிப்பபடையில், சட்டவிரோத பணப் பரிமாற்ற தடை சட்டத்தின்கீழ் அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த ஆண்டு ஜுன் 14 ஆம் திகதி கைது செய்தனர்.

இந்த வழக்கில் செந்தில் பாலாஜிக்கு எதிராக அமலாக்கத் துறை கடந்த ஓகஸ்டில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.



அதன்பிறகு, அவருக்கு பிணை கோரி 2 முறை தாக்கல் செய்யப்பட்ட மனுக்களையும் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. 3 ஆவது முறையாக பிணை கோரி முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மீண்டும் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி எஸ். அல்லி முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி, செந்தில் பாலாஜி பிணை கோரி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# உதயநிதியை துணை முதல்வராக்க 'பில்டப் திருவிழா' நடக்கிறது

## - அண்ணாமலை விமர்சனம்



"தமிழக முதல்வரைப் பொறுத்தவரை தெளிவாக இருக்கிறார். சேலம் இளைஞரணி மாநாடு முடிந்த பின்னரோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்னரோ, எப்படியாவது உதயநிதி ஸ்டாலினை துணை முதல்வராக்க வேண்டும் என்று. அதற்கான ஒத்திகைதான் தற்போது நடக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம். உதயநிதி ஸ்டாலினுக்கான 'பில்டப் திருவிழா' நடந்து கொண்டிருக்கிறது."

– இவ்வாறு பா.ஜ.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் பேசிய அக்கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முதல்வரின் கவனம் எல்லாம் ஆட்சியில் இல்லை. அவரது கவனம் அனைத்தும் உதயநிதியை துணை முதல்வராக கொண்டுவந்து முதல்வராக்குவதில்தான் இருக்கிறது. தி.மு.கவைப் பொறுத்தவரை மிக எளிதாக முடிவுகளை எடுக்க முடியவில்லை.

அறிவாலயத்தில் ஒரு நிமிடத்தில் முடிவெடுத்து, அதை தொண்டர்களுக்கு இரண்டு நிமிடத்தில் சொல்லி, தொண்டர்கள் அதை மூன்று நிமிடங்களில் ஏற்றுக்கொள்வார்கள். இப்படித்தான் அறிவாலயத்தில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. காரணம், இங்கு ஒரு குடும்பம் மட்டும் ஆட்சியில் இருக்கிறது.

ஆனால், பா.ஜ.கவைப் பொறுத்தவரை அவ்வாறு இல்லை. சின்னச் சின்ன பிரச்சினைகளின் ஊடே ஜனநாயகத்தை வளர்த்து கட்சியை வளர்ப்பதுதான் பா.ஜ.கவின் அழகே. உலகிலேயே உண்மையான பரிபூரணமான தலையில் தொடங்கி கால் வரை முழுமையாக ஒரு ஜனநாயகம் இருக்கும் கட்சி பா.ஜ.கதான். அதனால், கட்சியிலும் இயற்கையாகவே பிரச்சினைகளும் அதிகமாகத்தான் இருக்கும். அண்ணாமலையால் கட்டளையிட முடியாது. அண்ணாமலையும் இந்தக் கட்சியில் ஒரு தொண்டன், ஒரு சேவகன்" – என்றார்.

# மக்களவை தேர்தலுக்கான தயார்நிலை குறித்து ஆலோசனை

மக்களவை தேர்தலுக்கான தயார் நிலை குறித்து ஆய்வு செய்யும் வகையில் அனைத்து மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் பங்கேற்கும் 2 நாள் ஆலோசனை கூட்டம் டில்லியில் இடம்பெற்றுள்ளது.

இந்தியா முழுவதும் தேர்தலை நியாயமாக, அமைதியாக நடத்தி முடிப்பதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக மக்கள வை தேர்தலுக்கான தயார்நிலை குறித்து ஆய்வு செய்யும்வகையில், தேர்தல் ஆணையம்சார்பில் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் பங்கேற்கும் 2 நாள்கள் ஆலோசனை கூட்டம் டில்லியில் உள்ள இந்திய சர்வதேச ஜனநாயக மற்றும் தேர்தல் மேலாண்மை மையத்தில் இடம்பெற்றுள்ளது.

# ஹமாஸின் முக்கிய தளபதிகள் இஸ்ரேலால் கொல்லப்பட்டனர்



இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான போர் காலாண்டை எட்டியுள்ளது. இந்த நிலையில், இஸ்ரேலின் வான் வழித் தாக்குதல்களால் ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

கான் யூனிஸ் நகரத்தின் தெற்குப் பகுதியில் உள்ள ஹமாஸ் அமைப்பின் கட்டடங்களில் நடத்திய வான்தாக்குதலில் 7 ஹமாஸினர் கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பின் நுக்பா பிரிவின் தளபதி அந்த தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

கான் யூனிஸில் சோதனையில் ஈடுபட்ட மற்றொரு இஸ்ரேல் இராணுவக்குழு ஹமாஸின் ஆயுதக் கிடங்கை அழித்ததாகத் தெரிவித்துள்ளது. அந்த கிடங்கில் ஏகே – 47 மற்றும் ஆர்.பி.ஜி. ரக ஆயுதங்கள் கிடைக்கப்பெற்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய காசாவில் மகாசி நகரில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 20 ஹமாஸ் அமைப்பினர் கொல்லப்பட்டனர் எனவும் அதில் 7 பேர் நுக்பா பிரிவின் தளபதிகள் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், மகாசியில் இஸ்ரேல் இராணுவத்தினரின் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய இரண்டு ஹமாஸ் அமைப்பினர் கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பு கடந்த ஒக்டோபர் மாதம் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலுக்கு பழிவாங்கும் நோக்கத்தோடு கடந்த மூன்று மாதங்களாக காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்திவருகிறது.

இந்த தாக்குதலில் இதுவரை 23 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

# செங்கடலில் சரக்குக் கப்பல்கள் மீது தாக்குதல்: ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஐ.நா. கண்டனம்



செங்கடல் வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்களை இலக்கு வைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்தும் தாக்குதல்களுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அவை கண்டனம் தெரிவித்துள்ளது.

செங்கடல் வழியாகச் சென்ற 'கேலக்ஸி லீடர்' சரக்குக் கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். அதனைத் தொடர்ந்து அப்பகுதியில் சுமார் 24 முறை தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இத்தகைய தாக்குதல்களை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அவை பிரேரணை ஒன்றை நிறைவேற்றி வலியுறுத்தியுள்ளது.

காசாவில் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் படையினருக்கும் இடையிலான மோதல் தொடங்கியதிலிருந்து, தங்கள் நாட்டையொட்டிய செங்கடல் பகுதி வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகளை வீசியும், ட்ரோன்களை ஏவியும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

காசா போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவு வழங்கும் வகையில், இஸ்ரேலுடன் தொடர்புபட்ட சரக்குக் கப்பல்களை மாத்திரம் தாக்கி அழிப்பதாக முன்னதாக அவர்கள் தெரிவித்திருந்த போதும், நாளடைவில் ஏனைய கப்பல்கள் மீதான தாக்குதல்கள் அதிகமாகி வருகின்றன.

உலகின் கடல் வணிகத்தில் பிரதான வழித்தடமான செங்கடல் பகுதியில் இந்த தாக்குதல் இடம்பெறுவதால், நாடுகள் பல பொருளாதார பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

இதனால், செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்களிடமிருந்து சரக்குக் கப்பல்களை பாதுகாப்பதற்காக இலங்கை, இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், சிங்கப்பூர் போன்ற நாடுகளும் தங்களது போர்க் கப்பல்களை அங்கு ரோந்துப் பணியில் ஈடுபடுத்தியுள்ளன.

சரக்குக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்ததுவது தொடர்ந்தால் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் எச்சரித்திருந்தன.

இந்த நிலையில், ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இலக்குகளுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் பிரித்தானிய படையினர் வான்வழித் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், மேற்படி தாக்குதல்களை ஏமனில் உள்ள சாட்சிகளும் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்தநிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன். "தேவைப்பட்டால் மேலும் நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம்" என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.




**உரலார் கேள்வி :- இவ் உலகில் உங்களை வியக்க வைக்கும் விடயம் எது ?**

**உலக்கையார் பதில் :-** வியப்பதற்கான விடயங்கள் இவ்வுலகில் பல இருந்தாலும், அவற்றைவிட மனிதர்கள்தான் என்னை அதிகம் வியக்க வைக்கிறார்கள். மற்றையவைக்கென்று இருக்கும் இயல்பு பெரும்பாலும் அவற்றிடம் ஒரேவிதமாய்த் தொடர்கிறது. ஆனால் மனிதர்க்கென்று நிரந்தரமான ஓர் இயல்பு இருப்பதாய்த் தெரியவில்லை. நல்லவனாய் இருக்கும் ஒருவன் திடீரெனக் கெட்டவனாகி விடுகிறான். கெட்டவனாய் இருக்கும் ஒருவன் திடீரென நல்லவனாய் மாறிவிடுகிறான். அதுமட்டுமன்றி ஒருவனே காலை ஒருவிதம், மதியம் ஒருவிதம், மாலை ஒருவிதமாக வேறுவேறு இயல்புகளைக் கொண்டு ஆச்சரியப்படுத்துகிறான்.

இந்திய இராணுவத்துடனான மோதல் தொடங்கிய பின்பு, புலிகள் காட்டுக்குள் சென்று தலைமறைவானார்கள். அக் காலத்தில் யாழ் இந்துக்கல்லூரியில் எனக்குக் கற்பித்த, சுந்தரதாஸ் என்கின்ற ஆளுமை மிக்க ஆசிரியரோடு ஒருநாள் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவர் என்னிடம் 'இனி அவங்கள் கொஞ்சம் நிம்மதியாய் இருக்கலாம்' என்றார்.

அவர் கருத்து என்னை ஆச்சரியப்படுத்தியது. 'கொடிய விலங்குகளும் விஷ ஜந்துக்களும் நிறைந்த காட்டுக்குள் எப்படி சேர் நிம்மதியாய் இருக்க முடியும்?' என்று அவரிடம் வியப்பாய்க் கேட்டேன். அதற்கு அவர், 'ஜெயராஜ்! காட்டுக்க இருக்கிற மிருகங்களும், பாம்புகளும் எப்பவும் ஒரே மாதிரித்தான் இருக்கும். அதனால அதுகளுக்கு ஏற்றமாதிரி நாங்கள் பாதுகாப்பா நடந்து கொள்ளலாம். மனிசர விளங்கி நடப்பதுதான் கஷ்டம். ஒரு நேரத்தில பசுவாய் இருக்கிறவன், இன்னொரு நேரத்தில பாம்பாய் மாறி நிப்பான். யார் எப்ப, எப்பிடி மாறுவானெண்டு கண்டுபிடிக்கிறது கஷ்டம். அதனாலதான் மனிதரோடை இருக்கிறதைவிட காட்டில நிம்மதியாய் இருக்கலாம் என்று சொல்லுறன்.' என்றார்.

அவரது பதிலை நான் மிகவும் ரசித்தேன். அவர் சொன்னது அத்தனையும் சத்தியம். மனிதர்களுக்குள் சந்தர்ப்பத்திற்கேற்ப இருக்கும் விலங்குகளை இனங்கண்டு நடப்பது இலேசான வேலையில்லை. அதனால்தான், மனிதர்கள்தான் என்னை அதிகம் ஆச்சரியப்படுத்துகிறார்கள் என்கிறேன்.

**சல்லடையார் சலிப்பு - 'கடவுள் பாதி, மிருகம் பாதி கலந்து செய்த மனிதன் நான்' - 'சூப்பருங்கோவ்'**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- இத்தனை நாள்களாகப் பேசியும், எழுதியும் வருகிறீர்கள். அதனால் உங்களை அடையாளப்படுத்தியதன்றி சமுதாயத்திற்கு ஏதேனும் பயன் விளைந்திருக்கிறது என்று கருதுகிறீர்களா ?**

**உலக்கையார் பதில் :-** இதுபற்றி நானும் சிந்தித்திருக்கிறேன். நீங்கள் சொல்வதில் உண்மை இல்லாமல் இல்லை. அதே நேரத்தில் முழுவதும் உண்மையாயும் இல்லை. பேச்சைக் கேட்பவர்களும், எழுத்தைப் படிப்பவர்களும் பெரும்பாலும் அவற்றை ஒரு வித்தையாய் இரசித்துவிட்டுப் போய்விடுகிறார்கள் என்பது உண்மைதான். எங்கள் நாட்டில் இதனை வெளிப்படையாய் உணர்ந்திருக்கிறேன். சொல்லப்படும் கருத்துக்களை மனதிலும், புத்தியிலும் ஏற்று பின்பற்றி வாழ நினைப்பவர்கள் தொகை இங்கு மிக மிகக் குறைவாகத்தான் இருக்கிறது.

ஆனால் தமிழ் நாட்டில் அப்படி இல்லை. அங்குள்ளவர்களில் பலர் கேட்ட, வாசித்த விடயங்களை வேதவாக்காகக் கொண்டு, அப்படியே அவற்றைப் பின்பற்றி வாழ நினைக்கிறார்கள். விமான நிலையங்களில் நான் நிற்கும் போது அவர்களில் பலர் காட்டும் மரியாதையைக் கண்டு நான் திகைத்திருக்கிறேன். பலரும் கூடி நிற்கும் விமான நிலையம் என்றும் பார்க்காமல், பெரும் பதவிகள் வகிக்கும் அவர்களில் சிலர் பாதணிகளைக் கழற்றி சாஷ்டாங்கமாக எனது காலில் விழுந்து வணங்கி என்னைக் கலங்கடிக்கிறார்கள்.

'கொவிட்' வந்தபிறகு, சென்னையில் நான் நடத்தி வந்த ' உயர் வள்ளுவம்' எனும் அமைப்பின் திருக்குறள் வகுப்புக்களை 'சூமில்' நடத்த வேண்டி வந்தது. அதனால் இன்று அவ் வகுப்பு, உலகின் பல நாடுகளுக்கும் பரவியிருக்கிறது. நேர வேறுபாட்டையும் கருதாமல் நடுராத்திரி நேரத்திலும் அவ் வகுப்புக்களைக் கேட்பதும், அதுபற்றிப் பேசுகையில் கண்ணீர்விட்டு அழுவதும், நான் சொற்பொழிவுக்குச் செல்லும் இடங்களில் எல்லாம் எனக்காகக் காத்திருந்து பரிசுப் பொருள்களையும், பண முடிச்சுக்களையும் அள்ளித்தந்து, என்னைக் கண்டதையே பெரும் பேறாக உரைத்து நெகிழுவதுமாக உருகும் அவர்களைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன்.

எனது எழுத்தாலும், பேச்சாலும் தங்கள் வாழ்க்கைப் பாதை மாறியது பற்றி அவர்கள் நெகிழ்சியொடு சொல்கிற பொழுது என் முயற்சிகள் பயன்பெற்றிருக்கிறதே என

**(12ஆம் பக்கம் பார்க்க)**

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகிழ்ந்து போகிறேன். இதே திருக்குறள் வகுப்பை எங்கள் மண்ணுக்கும் பயன்தரும் வண்ணம் நடத்த வேண்டும் என்று நினைந்து, கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ரயிலில் சென்று, அவ்வகுப்பை நடத்த முற்பட்டேன். அவ் வகுப்பு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாகத் தேயத் தொடங்கியது. 'இதெல்லாம் எங்களுக்கும் தெரியும்! நீரும் சொல்லிவிட்டுப் போம்!' என்றாற்போலப் பலர் அவ்வகுப்பை எதிர் கொண்டார்கள். அதனால் அதனை நிறுத்திவிட்டேன்.

நம்மவர்களை முற்றாகக் குற்றம் சொல்லவும் மாட்டேன். கல்வியாய் அன்றி, வாழ்க்கையாய்ப் பாடம் கேட்ட கொழும்பு இளைஞர்கள் சிலர், தம்மி யல்பிற்கு மாறாய்ப் புலால் மறுத்து என்னை ஆச்சரியப்படுத்தினார்கள். அதுபோல எனது அரசியல் கட்டுரைகள் பல இடையிடையே நம் தலைவர்களை அதிரச் செய்திருக்கின்றன.

முக்கியமான ஒன்றைச் சொல்லி முடிக்க லாம் என்று நினைக்கிறேன். 1994 ஆம் ஆண்டு என்று ஞாபகம். திலீபன் நினைவுதின நிகழ்வுக ளில், புலிகளை மகிழ்விப்பதாய் எண்ணிய சிலர், அம்முறை பஜனை, காவடி, தூக்குக்காவடி என அத்தியாக நிகழ்வை பக்திமயப்படுத்த முயன்றார்கள். நிகழ்வுகளின் இறுதிநாளன்று அங்கு எங்களது பட்டிமண்டபம் நிகழ்ந்தது. அதில் இவர்களின் பொய்மையை நான் கடுமையாய்க் கண்டித்தேன். நிகழ்ச்சி முடிந்ததும் 'தேவையில் லாமல் புலிகளோடு மோதிவிட்டீர்கள், அவர்கள் உங்களை என்ன செய்யப் போகிறார்களோ தெரியவில்லை.' என என்னைப் பலர் மிரட்டி னார்கள். ஆனால் அடுத்த ஆண்டு திலீபனின் நினைவுதின நிகழ்வுகளில் ஒரு காவடியோ, தூக்குக்காவடியோ சேர்த்துக் கொள்ளப்பட வில்லை. என் கருத்து தலைமையின் காதுவரை சென்று அங்கீகரிக்கப்பட்டது கண்டு மகிழ்ந்து போனேன்.

இப்படி நிகழும் சில அனுபவங்கள்தான் என்னைத் தொடர்ந்து பேசவும், எழுதவும் வைக் கின்றன.

**சல்லடையார் சலிப்பு - 'சொல்பவன் சொன் னால் கேட்பவன் கேட்பானுங்கோ'**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- சுமந்திரன், சிறீதரன் தலை மைப் போட்டி கடுமையாகி இருப்பதைக் கவனித்தீர்களா ?**

**உலக்கையார் பதில் :-** ' கெடுகுடி சொற்கேளாது சாக்குடி மருந்து குடியாது ' என்று எங்களின் ஆச்சி அடிக்கடி சொல்லுவார். அது தான் ஞாபகத் திற்கு வருகிறது. ஏற்கனவே தலைமைக்குறை



பாட்டாலும், உட்பகையாலும் 'வீடு' இடிந்து விழும் நிலையில் இருக்கிறது. அது தெரிந்தும், மேலும் 'வில்லங்கம்' வளர்க்கும் இவர்களை என்ன சொல்ல? போன தேர்தலில் கைகோர்த்து நின்றவர்கள் இப்போது 'கைமுறுக்கி' நிற்கி றார்கள். இவர்களுக்கு 'வால் முறுக்கிவிடுவோ ரின்' செயல்தான் இது என்று நினைக்கிறேன். தமக்குள்ளேயே இணக்கம் காண முடியாத இவர்கள்தான், சிங்களவர்களோடு பேசி இனப் பிரச்சினைக்கு இணக்கம் காணப் போகிறார் களாம்! நல்ல வேடிக்கை! எவர்தோற்றாலும் பகை வளரப் போவது நிச்சயம். தமிழரசுக் கட்சிக்கு சனிமாற்றம் சரியாய் இல்லை என்றே தோன்று கிறது.

**சல்லடையார் சலிப்பு - 'அரசியலில் தோல்வி யும் வெற்றியும் சகஜமப்பா' - ஹீ ஹீஹீ.....!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- பாரதத்தில் திறக்கப்பட விருக்கும் இராமர் கோவில் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?**

**உலக்கையார் பதில் :-**ஓர் உண்மை இந்துவாய் மகிழ்ச்சியடைகிறேன். இதை நான் சொன்னதும் சிலர் மீண்டும் என்மேல் 'சங்கி' முத்திரை குத்தப் போகிறார்கள். அவர்களுக்குப் பயந்து என்



கருத்திற்கு நான் 'பொய்முலாம்' பூச விரும்ப வில்லை. எனது கருத்தை வெளிப்படையாய்ச் சொல்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

'சுகப்பிரசவமாய்' நிகழ்ந்திருக்கவேண்டிய காரியத்தை, மதத் தீவிரவாதிகள் தேவையில் லாமல் 'ஆயுதக்கேசாக்கி' விட்டார்கள். இருபக்க மதத் தீவிரவாதிகளையும்தான் சொல்லுகிறேன். இராமஜென்ம பூமியில் இருந்த பழைய ஆலயம் இடிக்கப்பட்டு, அங்கு மசூதி கட்டப்பட்டதை நீதி மன்றம் உறுதி செய்த பிறகு, அவ்விடத்தில் இராமர் கோவில் அமைப்பதில் தவறேதும் இருப்பதாய்ச் சொல்ல முடியாது.

'சமயப் பொதுமை' என்பது பாரதத்தின் பெருமைக்கான ஒரு கொள்கை. ஆனாலும் இந்து மதம் அதன் பழைய ஆணிவேராய்த் திகழ் வதை யாரும் மறுக்க மாட்டார்கள். இடையில் வந்த வேற்றவர்களால் இதிகாசத் தொடர்புடைய பழைய ஆலயம் இடிக்கப்பட்ட உண்மை வெளியான பிறகு, இஸ்லாமியச் சகோதரர்களே முன்வந்து அவ்விடத்தில் இராமர் கோவில் கட்ட அனுமதித்திருக்க வேண்டும். அப்படி இஸ்லாமி யச் சான்றோர்கள் சிலர் அனுமதித்ததாயும் சொல்லப்பட்டது. அவர்கள்தான் பாரதத்தாயின் உண்மைப் புதல்வர்கள்.

சட்டத்தைச் சான்றாய் வைத்து மசூதி இருந்த இடத்தில் இராமர் கோவில் கட்டியதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் அந்தச் சட்டத்தைச் சிறிதும் மதியாமல் தம் இஷ்டத்திற்கு வெறித் தனமாய் உள் நுழைந்து மசூதியை இடித்தது மாபெரும் குற்றம் என்பதில் எந்த ஐயத்திற்கும் இடமில்லை. அந்தப் பழி பா.ஜ.க. வை கடைசி வரை சுற்றிச்சுற்றி வரத்தான் போகிறது.

மதத்தைவிட மனிதர்கள் முக்கியமானவர்கள். எல்லா மதத்தாரையும் தன்பிள்ளைகளாய்

(13ஆம் பக்கம் பார்க்க)

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

அணைத்து நிற்கும் பாரதத்தாயின் உன்னதப் பண்பை, யாரும் சிதைத்துவிடக்கூடாது! புதிய இராமர் கோயில் திறப்பு விழாவிற்கு இஸ்லாமிய அமைப்புக்களுக்கும் அழைப்புவிடப்பட்ட செய்தியும் அதனை அவர்கள் மனமுவந்து ஏற்றுக் கொண்டிருக்கும் செய்தியும், பாரதத்தின் சகோதரத்துவத்தை வெளிப்படுத்தும் பெரிய காரியங்கள்.

பிரதமர் மோடியவர்களின் 'விஸ்வரூபம்' நாளுக்கு நாள் விரிந்து கொண்டே போகிறது. மதம், மொழி, பிராந்தியம் என்ற எல்லைகளைக் கடந்து, அவரது கைகள் இன்னும் விரிவடைய வேண்டும். இன்றைய நிலையில் இக்காரியத்தைச் செய்ய, மோடியளவான வீரியம் மிக்க வேறு தலைவர்கள் இருப்பதாய்த் தோன்றவில்லை. இராமர் கோவில் திறப்புவிழா நடக்கும் அதே நேரம், பாரதம் முழுவதும் பரவியிருக்கும் இஸ்லாமியச் சகோதரர்களின் மனங்கள் மகிழும் வண்ணம், இராமர் கோயில் கட்ட எடுத்துக் கொண்ட அதே அக்கறையோடு, அரசே முன்னின்று இடிக்கப்பட்ட மசூதியை வேறோர் இடத்தில் கட்டிக் கொடுக்க வேண்டும். அக்காரியமும் நடைபெறுவதாக செய்திகள் வருகின்றன. அது நடந்தால்தான் இந்துக்கள் தம்மை உண்மை



இந்துக்களாய் அடையாளப்படுத்தலாம்.

சல்லடையார் சலிப்பு - 'சூப்பர்' நேர்மையான பதிலுங்கோ!

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖





# தென்கிழக்குப் பல்கலையில் வெள்ளத்தினால் கல்வி நடவடிக்கைகள் மேலும் ஒத்திவைப்பு!

(நூருல் ஹுதா உமர்)

சீரற்ற காலநிலை, மழை, வெள்ளம் மற்றும் நீர்த் தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு போன்றவை காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகம் கடந்த இரண்டு நாள்களாக வெள்ள நீரில் மூழ்கியுள்ளது.

வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னரே அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக பல்கலைக்கழக எல்லைக்குள் வெள்ள அபாயம் ஏற்படலாம் என்ற அச்சத்தில் பல்கலைக்கழகத்தின் மூத்த ஆலோசனைக் குழுவினரின் ஆலோசனைக்கு அமைவாக உபவேந்தர், ஒலுவில் வளாக மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் எதிர்வரும் 2024 ஜனவரி 16 ஆம் திகதி வரை இடைநிறுத்துவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்றுக் கூடிய பல்கலைக்கழகத்தின் மூத்த ஆலோசனைக் குழுவின் நீண்ட ஆலோசனைகளுக்குப் பிறகு கல்வி நடவடிக்கை நிறுத்தத்தை மேலும் நீடித்து, எதிர்வரும் 22 ஆம் திகதி வரை அனைத்துக் கல்வி நடவடிக்கைகளையும் ஒத்திவைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக எல்லைக்குள் வெள்ள அபாயம் ஏற்படலாம் என்ற அச்சத்தில் அனர்த்தம் ஏற்படலாம் என சந்தேகிக்கப்பட்ட இடங்களில் இருந்து அகற்றக்கூடிய அனைத்துப் பொருள்களையும் தஸ்தாவேஜுகளையும் பல்கலைக்கழக அனர்த்த முகாமைத்துவ குழுவின் கண்காணிப்பில் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்த அவர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இருந்தபோதும் தொடரான மழையை அடுத்து ஏற்பட்ட அவசரகால வான்கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக எதிர்பாராத சில பிரதேசங்களையும் வெள்ளம் ஆக்கிரமித்திருந்தது. இவ்வாறான சூழலில் பல்கலைக்கழகத்தில் அவசர நிலையைப் பிரகடனப்படுத்திய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பல்கலைக்கழகத்தின் மூத்த ஆலோசனைக் குழுவினரின் கண்காணிப்பின் கீழ், எஞ்சிய மீட்கப்பட வேண்டிய இடங்களில் இருந்த ஆவணங்களையும் பல்கலைக்கழக சொத்துக்களையும் பாதுகாத்து அகற்றும் நடவடிக்கைகளில் பல்கலைக்கழக ஊழியர்கள் ஈடுபட்டனர் எனத் தெரிவித்தார். பல்கலைக்கழக ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் மீட்புப்பணிகளில் ஈடுபட்டிருந்த அதேவேளை முப்படையினரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

நேற்றைய நிலைவரப்படி வெள்ளம் படிப்படியாக வடிந்து வருவதாகவும் இவ்வாறான சூழல் நீடிக்குமாக இருந்தால் பல்கலைக்கழக வளாகத்தை சுத்தம்செய்து மிக விரைவில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன எனவும், எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்பட்டால் கையாளவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும், அவை தொடர்பில் விரைவில் அறிவிக்கமுடியும் என்றும் மீட்புப்பணிகளில் மிகுந்த சிரத்தையுடன் செயற்பட்ட பல்கலைக்கழக ஊழியர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கிய முப்படையினருக்கும் நன்றி கூறுகிறார் எனவும் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.



# நாவிதன்வெளி கிட்டங்கிப் பாலத்தின் ஊடான போக்குவரத்து தொடர்ந்து முற்றாகப் பாதிப்பு!

**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

கல்முனை– நாவிதன்வெளி கிட்டங்கி பாலத்தை மேவி இரண்டாவது நாளாகவும் நேற்று வெள்ளநீர் பெருக்கெடுத்துள்ளது. இதனால் இந்தப் பிரதான வீதி ஊடான பொதுமக்கள் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

நாவிதன்வெளி பிரதேச செயலகம், பிரதேச சபை, அனர்த்த முகாமைத்துவ குழு மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து கனரக வாகனத்தை மாத்திரம் பயன்படுத்தி பொதுமக்கள் போக்குவரத்திற்கான விசேட ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இதேவேளை கடற்படை அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு என்பன ஒன்றிணைந்து அவசர போக்குவரத்துக்கான படகுச் சேவையும் தயார்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் ஆர்.ராகுல நாயகியின் வழிகாட்டலுக்கு அமைய உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், கணக்காளர் றிஸ்வி யஹ்சர் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்களின் போக்குவரத்திற்கான விசேட ஏற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

பொலிஸெ மற்றும் கடற்படை உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.











# வாதுவ, காலி வீதியில் புரண்ட டிப்பர் லொறி

## சாரதியும், நடத்துனரும் படுகாயம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கடந்த வியாழனன்று வாதுவ, காலி வீதியில் எதிரேதிராக பயணித்த காரும் டிப்பர் ரக லொற யும் மோதுண்டதில் டிப்பர் லொறி தலைகீழாக புரண்டது. அதப் சாரதியும் நடத்துனரும் படுகாய மடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறையிலிருந்து பாணந்துறை நோக்கி பயணித்த டிப்பர் வாகனமும், பாணந்துறையிலிருந்து களுத்துறை நோக்கி பயணித்த காரும் ஒன்றை யொன்று கடக்கும் வேளையில் இவ் விபத்து சம்பவித்துள்ளதாக களுத்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரின் சாரதி கைது செய்யப்பட் டுள்ளார்.

விபத்து சம்பந்தமாக களுத்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு
கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டு கழக
ஏற்பாட்டில் DAN TV யின்
அனுசரனையுடன்



வடமராட்சி கிழக்கில்
03வது மாபெரும்
பட்டத் திருவிழா
2024

காலம் : 16.01.2023 (செவ்வாய்கிழமை)
நேரம் : பிற்பகல் 2.00 மணி
இடம் : கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டுக் கழக மைதானம்

தங்களின் கற்பனைத்திறனுக்கு எம் மண்ணில் ஓர் அங்கீகாரம் தமிழரின் பண்பாட்டு கலையை எம்முடன் சேர்ந்து கொண்டாடி பணப்பரிசில்களையும் வெற்றி பெற்று தைபொங்கலை கொண்டாடுங்கள்.



முதலாம் பரிசு 100,000/=
இரண்டாம் பரிசு 50,000/=
மூன்றாம் பரிசு 25,000/=



பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்
றஜனி : 077 843 5381 தயாபரன் : 077 152 9308
ஏற்பாட்டுக்குழு



# மட்டு. மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தில் 5,100 ஏக்கர் விவசாய செய்கைகள் பாதிப்பு

(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் 5,100 ஏக்கர் விவசாய செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் கமநல சேவை திணைக்களத்தில் பாதிப்புகளைப் பதிய வேண்டும். அவர்களுக்குரிய விவசாய காப்புறுதி நஷ்ட ஈடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

– இவ்வாறு நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜே.ஜே.முரளிதரன் கருத்துத் தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிரான் பிரதேச செயலகப் பிரிவில் இராணுவத்தினரின் உதவியுடன் மாணவர்கள் உயர்தரப் பரீட்சை நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

எதிர்காலத்தில் மாவட்டத்தில் வரக்கூடிய வெள்ள அனர்த்தங்களைத் தவிர்க்கும் முகமாக பாதிக்கப்பட்ட – இனங்காணப்பட்டுள்ள பகுதிகளுக்கு ஒரு புதிய திட்டத்தை வகுத்து, மக்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜே.ஜே.முரளிதரன் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வடிகான் அமைப்பு செயல்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கான நிதி தேவையும் நமது மாவட்டத்தில் உள்ளது. இதனைக் கவனத்தில் எடுத்து எதிர்காலத்தில் செயல்பட வேண்டி உள்ளது.

வாகரைப் பிரதேசத்தில் நோயாளிகளை வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லவும் படையினர் உதவி புரிந்துள்ளனர். வெள்ள அனர்த்தங்களின் போது தேவையான உதவிகளைச் செய்யத் தயாரான நிலையில் அவர்கள் உள்ளனர். – என்றார் அவர்.



# வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் சங்கத் தலைவி ஜெனிற்றா நேற்று பிணையில் விடுவிப்பு

(கி.வசந்தரூபன்)

வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவி சி.ஜெனிற்றா நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 5 ஆம் திகதி வவுனியாவிற்கு விஜயம் செய்ததுடன் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற வன்னி மாவட்டங்களிற்கான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது, வட-கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி உட்பட இருவர் நீதிமன்ற கட்டளையை மீறி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர் எனத் தெரி



வித்து வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அன்றையதினமே மாலை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதனையடுத்து சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றா விளக்கமறியலில் வைக்கப்பட்டமையுடன், மற்றைய பெண் அன்றையதினமே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்று வவுனியா நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் சங்கத்தின் தலைவியை ஒரு லட்சம் ரூபாய் பிணையில் விடுவித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றா –

நாங்கள் ஜனாதிபதியை சந்திப்பதற்கே அனுமதி கேட்டிருந்தோம். மாறாக எந்தவிதமான வன்முறையையும் நாம் மேற்கொள்ளவில்லை. அரச சொத்துக்களை சேதப்படுத்தவில்லை. வீதியை மறிக்கவில்லை. ஆனால் பொலிஸார் எங்களை பெண்கள் என்றும் பார்க்காது அநாகரிகமான முறையிலேயே கைது செய்தனர். கொலைக் குற்றங்களை செய்தவர்களை கூட இப்படி நடாத்தியிருக்கமாட்டார்கள். இது எமக்கு மனவருத்தமாக உள்ளது. நீதிக்கான குரல்களை நசுக்கும் செயற்பாடாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம். – என்றார்.



# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல்

அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிராக தேசிய மக்கள் சக்தியினால் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சட்டமூலம் மக்களின் இறையாண்மை, அரசமைப்பினால் உறுதி செய்யப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பான விடயங்கள் தண்டனைச் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டியவை என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கை விமானப்படையின் வீரர்கள் பயணித்த ஹெலிக்கொப்டர் மத்திய ஆபிரிக்காவில் விபத்து




மத்திய ஆபிரிக்காவில் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த இலங்கை விமானப்படை வீரர்கள் பயணித்த ஹெலிக்கொப்டர் விபத்திற்குள்ளாகியுள்ளது.

எம்.ஐ. வகையை சேர்ந்த அந்த ஹெலிக்கொப்டர் அந்த நாட்டு நேரப்படி நேற்று காலை 9.30 மணிக்கு விபத்திற்குள்ளாகியுள்ளது.

எனினும், விமானப்படை வீரர்களுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக ஹெலிக்கொப்டர் விபத்திற்குள்ளாகியதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விமானப்படைத் தளபதியின் ஆலோசனைக்கு அமைவாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## அதிகூடிய வரி வருமானம் கடந்த ஆண்டிலே பதிவு

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டு வரி வருமானம் 80 வீதம் அதிகரித்துள்ளதாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

வரலாற்றிலேயே அதிக வரி வருமானம் பெறப்பட்ட சந்தர்ப்பமாக இது பதிவாகியுள்ளது.

கடந்த வருடத்தில் மொத்த வரி வருமானம் 1550.6 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் பெறப்பட்ட வரி வருமானம் 861.2 பில்லியன் ரூபாவாகும்.






# ஒரு லட்சத்து 78 ஆயிரம் பேருக்கு வெள்ளம், மண்சரிவினால் பாதிப்பு

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 78 ஆயிரம் வரை உயர்வடைந்துள்ளது.

இதில் அம்பாறை மாவட்டத்திலேயே அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் ஒரு லட்சத்து 69 ஆயிரம் பேர் அனர்த்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, பதுளை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை உள்ளிட்ட சில மாவட்டங்களிலும் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, பொலன்னறுவை – மட்டக்களப்பு வீதியில், கல்லேல்ல பகுதியூடாக கனரக வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை வெள்ள நிலைமையை ஆராய்ந்த பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பொலன்னறுவை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் ரஞ்சித் அழகோன் தெரிவித்தார்.

இதனிடையே, மண்சரிவு காரணமாக பதுளை – கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து, ஹாலிஎல – உடுவர பிரதேசத்தின் ஏழாம் கட்டையில் தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளது.

அந்த வீதியில் தொடர்ந்தும் மண்சரிவு அபாயம் காணப்படுவதுடன், வீதியில் வெடிப்புகள் காணப்படுவதாகவும் பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பிபிலை – லுணுகலை வீதியையும் சில கட்டுப்பாடுகளுடனேயே பயன்படுத்த முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பசறை – குடுகலபத்தனை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கெந்தகாமடபத்தனை கிராமத்தில் தொடர் மழையினால் நிலத்தில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டு மண்சரிவு அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக 19 குடும்பங்களை சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.



# சி.ஐ.டி. பொறுப்பதிகாரியாக டி.ஐ.ஜி.ரொஹான் பிரேமரத்ன

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் (சி.ஐ.டிக்கு) பொறுப்பாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் (டி.ஐ.ஜி.) ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, மேல் மாகாண (வடக்கு) பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஹான் பிரேமரத்ன குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார் என இலங்கை பொலிஸ் சேவை தெரிவித்துள்ளது.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ரொஹான் பிரேமரத்ன இதற்கு முன்னர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய காலத்தில் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு பொறுப்பான பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

கனேமுல்ல சஞ்சீவ உட்பட பல ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளை விசாரணை செய்த பொலிஸ் அதிகாரியாக அவர் கடமையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 13.01.2024




இன்று உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். உங்களின் உறுதி மற்றும் தைரியம் வெற்றி பெற உங்களுக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை சீராக ஆற்று வீர்கள். பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே முடிப் பீர்கள்.

உங்கள் தாயுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் பணிக்கு நீங்கள் ஊக்கத் தொகை பெறுவீர்கள். இது உங்களுக்கு கூடுதல் பண வரவாக இருக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் யதார்த்தமாகவும் தொழில் சார்ந்த அணுகுமுறையுடனும் நடந்து கொள்ள வேண்டும். இன்று பயணங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இசை நிகழ்ச்சி களில் பங்கு கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை சிறிது கவனமுடன் மேற்கொள்ள வேண்டும். பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும். அதன் மூலம் உங்கள் பணிகளை எளிதாக ஆற்ற இயலும்.

இன்று காதலுக்கு உகந்த நல்ல அல்ல. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

பணப்புழக்கம் மகிழ்சிகரமாக இருக்காது. பண இழப்பு ஏற்படாமல் இருக்க நீங்கள் கவனமாகக் கையாள வேண்டும்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இது உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. உங்கள் பணிகளை முன் கூட் டியே திட்டமிடுங்கள். இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். கூடுதல் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாத நிலை இருக்கும்.

உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். உங்கள் உணர்வுகளைக் கட்டுபடுத்த வேண்டும். அன்பை வளர்க்க வேண்டும்.

வீட்டின் புனரமைப்பு மற்றும் பராமரிப்புக்குப் பணம் செலவு செய்ய நேரும். பணத்தை கவனமாகக் கையா ளவும்.




இன்று உங்களுக்கு சுமூகமான நாளாக இருக்கும். இன்று புத்துணர்ச்சி யுடன் இருப்பதாக உணர்வீர்கள். சுப காரியங்களில் பங்கு கொள்வீர்கள்.

பணியில் வெற்றிகரமான பலன்கள் காணப்படும். உங்கள் சக பணியா ளர்களுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் திருமணத்தைத் திட்டமிடலாம். அதற் கான ஆயத்தங்கள் செய்து நீங்கள் மகிழலாம்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். உங்களால் சிறிது பணம் சேமிக்க இயலும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் முயற்சிகள் வெற்றி பெறும். எதிர்பாராத நன்மைகள் கிடைப்பதற் கான சாத்தியம் உள்ளது. இது உங்க ளுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று தேவையற்ற செலவுகளை சந்திக்க வேண்டிய சூழல் காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் ஏற்படும் காரணத்தால் உங்களால் அவற்றை சமாளிக்க இயலாது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொடை வலி போன்ற சிறு பிரச்சினைகள் இன்று உங்களிடம் காணப்படும்.




இன்று அவ்வளவு சிறப்பான நாள் அல்ல. ஏற்ற இறக்கங்கள் காணப்படும். உங்கள் மனதை தெளிவாக வைத்தி ருக்க வேண்டியது அவசியம்.

இன்று பணிகள் அதிகமாகவும் அதில் நீங்கள் மும்மரமாகவும் இருக்க வாய்புள்ளது. அனுசரித்து போவதன் மூலம் உங்கள் பணிகளை வெற்றிகரமாக முடிக்கலாம்.

உங்கள் துணையுடன் உணர்சிவசப்படுவீர்கள். இந்தப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். பணத்தை கவனமாகக் கையாளவும்.

அதிக பணிகள் காரணமாக சோர்வுடன் காணப்படு வீர்கள். தலைவலி காணப்படும். இதனால் அசௌகரி யமாக உணர்வீர்கள். இருந்த போதிலும் மன ஆற்றல் காரணமாக நீங்கள் இதனை சமாளிப்பீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி திட்டமிட்டு பணியாற்றுவது சிறந்தது. சில சமயங்களில் நீங்கள் பொறுமை இழக்கும் வாய்ப்பு உள்ளது. அமைதியாக செயல்பட வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் பணி களை முடிக்க முன் கூட்டியே திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன்சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். உங்கள் சொந்த பந்தங்களுடன் அன்பை வளர்த்துக் கொள்வது நல்லது.

இன்று பண வரவுக்குச் சாதகமான நாள் அல்ல. நீங்கள் தேவையின்றி பணத்தை செலவு செய்ய நேரலாம்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். கால் வலி மற்றும் தலைவலி போன்ற பாதிப்புகள் காணப்படும்.




இன்று விரைவில் முன்னேற்றம் கிடைக்கும் குறைந்த முயற்சியில் இன்று உங்களுக்கு வெற்றி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் இருப்பீர்கள்.

புதிய வேலைக்கான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் திறமையை உணர்ந்து கொள்ள இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று உங்கள் உடன் பிறந்தோரிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். உங்கள் குடும்பத்துடன் தரமான நேரத்தை செலவிடுவீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். இன்று உங்க ளால் பணத்தை அதிக அளவில் சேமிக்க இயலும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் திருப்தியும் தைரியமும் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.01.2024




இன்று பல செயல்கள் காணப்படும். நீங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி உங்கள் காரியங்களை மேற்கொள்ள வேண்டும். எந்த செயலையும் செய்வதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு தடவை யோசித்து செயல்படவேண்டும். உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.

பணியில் மாற்றங்கள் காணப்படும். பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். பணியிடத்தில் பிறருடன் பேசுவதற்கு முன் உங்கள் எண்ணங்களில் கவனம் செலுத்துங்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று செலவுகள் சுமையாக காணப்படும். உங்கள் பணத்தை சாதுர்யமாக நிர்வகிப்பது கடினமாக இருக்கும்.

கண் எரிச்சல் போன்ற பாதிப்பு காணப்படும்.




இன்று சராசரி பலன்கள் கிடைக்கும் நாள். நீங்கள் விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்க வேண்டும். இல்லையெனில் பிறகு வருத்தப்பட நேரும். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

உங்கள் சக பணியாளர்களுடன் உறவுமுறையில் சில பிரச்சினை காணப்படும். இது பாதிக்காத வகையில் நீங்கள் அனுசரித்து செயல்படுவது சிறந்தது.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. சில அமைதியற்ற தருணங்கள் காணப்படும்.

நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

கால் மற்றும் தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் பணிகளை எளிதாக கையாள்வது கடினமாக இருக்கும். வெற்றி காண நீங்கள் திட்டமிட்டு செயல்பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். இதனால் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் முறையுடன் பணியாற்ற இயலாது.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் நெருக்கத்தை இன்று தவிர்க்க வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி அவ்வளவு சிறப்பாக இருக்காது. பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. தக்க நேரத்தில் உணவை உட்கொள்ள வேண்டும்.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும் உங்கள் மனது தெளிவாக இருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறி திருப்தி கிடைக்கும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியில் சுமூகமான விளைவுகள் காணப்படும். உங்கள் திறமைக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

இன்று காதலுக்கு உகந்த நாள். நீங்கள் உங்கள் காதல் உணர்வுகளை இன்று வெளிப்படுத்த இயலும்.

நிதிநிலைமை வளர்ச்சி தரும் வகையில் இருக்கும். உங்கள் பணத்தை நீங்கள் புத்திசாலித் தனமாக கையாள்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் இன்று சிறந்த தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.



Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living
OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane. Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.
Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# சிறுவர் தொழுநோயாளர் அதிகம் பதிவாகும் ஐந்து நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கம்

உலகில் சிறுவர் தொழுநோயாளர்கள் அதிகளவில் பதிவாகும் ஐந்து நாடுகளில் ஒன்றாக இலங்கையும் உள்ளது.

நாட்டில் பதிவாகும் தொழுநோயாளர்களில் பத்து வீதமானோர் சிறுவர்கள் என சுகாதார அமைச்சின் தொழுநோய் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

ஜனவரி 28 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள தொழுநோய் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, தொழுநோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் விசேட தெளிவுபடுத்தல் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்துள்ளதாக அவர் கூறினார்.



# கெஹலியவுக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு!

## ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுச் செய்தது

சர்ச்சைக்குரிய மருந்து கொடுக்கல் வாங்கல் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் (சி.ஐ.டியில்) நேற்று முறைப்பாடு முன்வைத்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்டோர் இதன்போது சென்றிருந்தனர்.

நேற்று முன்வைக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் மீதான விவாதம் ஜனவரி 23,24 ஆம் திகதிகளில்



நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை எதிர்வரும் 23, 24ஆம் திகதிகளில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

# உயர் தரப் பரீட்சை வினாத்தாள் 'அவுட்'! ஒரு பாடப் பரீட்சையை மீள நடத்த முடிவு




உயர் தரப் பரீட்சையில் கடந்த ஜனவரி 10 ஆம் திகதி நடைபெற்ற விவசாய விஞ்ஞான பாடத்தின் இரண்டாம் பகுதிக்கான வினாத்தாள் மும்மொழிகளிலும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வினாத்தாள் பரீட்சைக்கு முன்னதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகியதாக தகவல்கள் கிடைத்துள்ளமையினால், இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

இரத்து செய்யப்பட்டுள்ள விவசாய விஞ்ஞான பாடத்தின் இரண்டாம் பகுதி வினாத்தாளுக்கான, மீள் பரீட்சையை விரைவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, மீள் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.